மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02-ம் நாள் திங்கட்கிழமை

அ.வ.எண். 3/22

வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: முத்துராஜ் | தேதி : 02.03.26
வயது : | த/பெ : வடிவேல்
கிராமம் : | தொழில் :
| மாவட்டம்:

---

**02.03.26 முதல் விசாரணை**

நான் திருநெல்வேலியின் வசித்து வருகிறேன். நான் 36 வருடங்களாக கட்டிட பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை மற்றும் புகைப்படங்கள் நீதிமன்ற ஆணையரிடம் நான் வழங்கியதாகும். அது நீ.ம.சா.ஆ 1 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

1.நான் 36 வருடங்களாக பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கதவு எண் 3/79 வீட்டினை பார்வையிட்டு அறிக்கை கொடுத்துள்ளேன். தாவா வீட்டிற்கு மேற்கு மற்றும் தெற்கு பக்கம் வாதிக்கு பாத்தியப்பட்ட வீடுகள் உள்ளன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தபசில் வீட்டின் அடித்தளத்தை தோண்டி பார்த்து அதன் ஆழத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.02 19:39:36 +0530

2.மாடியில் உள்ள தளக்கல் புதிதாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அறிக்கையில் செல்லியுள்ள போல் தபசிலில் உள்ள சுவர்களில் கீறல் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சுவர்கள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்தன என்றால் சரியல்ல. கட்டிடத்தின் வயது 80 இருக்கும் என்று நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சொல்லுவது போல் புதிதாக கட்டிடம் கட்டப்படவேண்டிய நிலையில் தபசில் கட்டிடம் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யான அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.03.02 19:39:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.